**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.59/2024 – PW- 3**

| | |
|---|---|
| Name | திரு. பரத் |
| Husband/Father Name | வாசு |
| Village /Area | மின்னல் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | தனியார் நிறுவன ஊழியர் |
| Age | 27 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 19.07.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 28.06.2021 அன்று நானும் பஸ்வான் வீட்டில் இருந்து நானும் பஸ்வான், வினோத் ஆகியோர்கள் இருசக்கர வாகனத்தில் அன்வர்கான்பேட்டைக்கு சென்று வரும் போது மேல் ஆவதம் பெட்ரோல் பங்கிற்கு அருகில் மதியம் சுமார் 02.00 முதல் 3.00 மணியளவில் எங்கள் வண்டியை வழி மடிக்கி அன்பரசு, சூரிய மூர்த்தி, ரஞ்சித், அஜத் மற்றும் சிலர் எங்களை வழி மடக்கினார்கள். அன்பரசு பஸ்வானை என்பவரை கத்தியால் குத்தி கிழே தள்ளினார்கள். சூரியமூர்த்தி கடப்பாறையால் பஸ்வானை வயிற்றில் குத்தினார். மற்ற நபர்கள் கையில் கத்தி வைத்திருந்தார்கள். சூரியமூர்த்தி, அஜித்குமார், அன்பரசு, புஜ்ஜி ஆகியோர்கள் கத்தியால் பஸ்வானை தாக்கினார்கள். தொலைவில் இருந்த எங்களையும் கத்தியால் தாக்க வந்தார்கள் நாங்க்ள பயந்து கொண்டு இருசக்கர வாகனத்தில் பஸ்வான் வீட்டிற்கு

சென்று பஸ்வானின் தந்தையிடம் சம்பவத்தை பற்றி தெரிவித்தோம். பிறகு நானும் பஸ்வானின் தந்தையும் சம்பவ இடம் சென்று பார்த்த போது பஸ்வான் மூச்சு, பேச்சி இல்லாமல் இரத்த வெள்ளத்தில் இறந்து விட்டிருந்தார். பிறகு சம்பவம் குறித்து பஸ்வானின் தந்தை மணி என்பவர் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் செய்தார்கள். நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரிகள் அனைவரும் சம்பவத்தன்று பஸ்வானை தாக்கியவர்கள் ஆவார்கள். எதிரிகள் பயன்படுத்திய ஆயுதங்கள் தான் நிதீமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஆயுதங்கள் ஆகும் அவைகள் ஏற்கனவே சா.பொ.1 முதல் சா.பொ.7 ஆக நீதிமன்றத்தால் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: மனுவின் பேரில் குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது.**

**ஒம்./–திருமதி. கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**